# වාර්ෂික වාර්තාව
# வருடாந்த அறிக்கை
# Annual Report
# 2022

## රාජ්‍ය භාෂා කොමිෂන් සභාව
## அரசகரும மொழிகள் ஆணைக்குழு
## OFFICIAL LANGUAGES COMMISSION



## உள்ளடக்கம்


பக்க இலக்கம்

அறிமுகம் 03

பகுதி I 04-09

- தொலைநோக்கு
- செயற்பணி
- நோக்கங்கள்
- பிரதான பணிகள்
- நிறுவனக் கட்டமைப்பு
- ஆணைக்குழுக் கூட்டங்கள்
- தேசிய மொழிகள் சமத்துவ மேம்பாட்டுச் செயற்றிட்டத்துடன் (NLEAP) இணைந்து நடைமுறைப்படுத்தப்பட்ட நிகழ்ச்சித் திட்டங்கள்
- இணையத்தளத்தை அங்குரார்ப்பணம் செய்தல்

பகுதி II 10-19

- 2022 ஆம் ஆண்டில் ஆணைக்குழுவினால் மேற்கொள்ளப்பட்ட செயற்பாடுகள்
- 2022 ஆம் ஆண்டில் நடைமுறைப்படுத்தப்பட்ட புதிய நிகழ்ச்சித் திட்டங்கள்
- 2022 ஆம் ஆண்டிற்கான செயற்பாடுகளை ஆரம்பிக்கையில் காணப்பட்ட சவால்கள்

பகுதி III - நிதித் தகவல்கள் 20- 50

- வருடாந்த நிதிசார் தகவல்கள்
- கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கை.

# அறிமுகம்

அரசகரும மொழிகள் ஆணைக்குழுவின் 2022 வருடாந்த அறிக்கையின் முதலாவது பகுதியில் ஆணைக்குழுவின் தொலைநோக்கு, செயற்பணி, நோக்கங்கள் மற்றும் உறுப்பினர்கள் குறித்த தகவல்கள், பணிக்குழு தகவல்கள் என்பவற்றுடன் நிர்வாகத்திற்கு ஏற்புடைய விடயங்கள் உள்ளடங்கும்.

1991 ஆம் ஆண்டின் 18 ஆம் இலக்க அரசகரும மொழிகள் ஆணைக்குழுச் சட்டத்தில் 4 நோக்கங்கள் காணப்படுகின்றன. இந்நோக்கங்களை நிறைவேற்றுவதற்காக மேற்பார்வை, விசாரணை, கல்வி மற்றும் ஆலோசனை போன்ற பிரதான பணிகளுக்கு ஏற்ப மொழிக் கணிப்பாய்வுகளை மேற்கொள்ளல், பொதுமக்கள் முறைப்பாடுகளை விசாரித்தல், விழிப்புணர்வூட்டல் நிகழ்ச்சித் திட்டங்களை நடாத்தல் மற்றும் அரசாங்கத்திடம் பரிந்துரைகளை வழங்கல் போன்ற செயற்பாடுகள் மேற்கொள்ளப்படுகின்றன. அச்செயற்பாடுகளுக்கு ஏற்புடைய தகவல்கள் இவ்வருடாந்த அறிக்கையின் இரண்டாவது பகுதியில் உள்ளடங்கியுள்ளன.

2022 டிசம்பர் 31 ஆம் திகதியுடன் முடிவடையும் வருடத்திற்கான நிதிக் கூற்றுக்கள் மற்றும் அக்காலப்பகுதிக்குரிய கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அவதானிப்புக்கள் உள்ளடங்கிய இறுதிக் கணக்காய்வு அறிக்கையானது இவ் அறிக்கையின் முறையே மூன்றாவது பகுதியில் உள்ளடங்கும்.

# பகுதி I

**அரசகரும மொழிகள் ஆணைக்குழுவானது 1991 ஆம் ஆண்டின் 18 ஆம் இலக்க அரசகரும மொழிகள் ஆணைக்குழுச் சட்டத்தின் ஏற்பாடுகளுக்கு அமைவாகத் தாபிக்கப்பட்ட நியதிச்சட்ட நிறுவனமாகும்.**

## தொலைநோக்கு

பொதுமக்களுக்கு சேவையினை வழங்குகின்ற சகல நிறுவனங்களிலும் அரசகரும மொழிக் கொள்கையினை நடைமுறைப்படுத்துவதற்கு ஊக்குவித்த நிறுவனமாக விளங்குதல்.

## செயற்பணி

அரசகரும மொழிக் கொள்கையினை நடைமுறைப்படுத்துவது தொடர்பில் விசாரணை, கண்காணிப்பு, கல்வி மற்றும் ஆலோசனை என்பவற்றினூடாக பொதுமக்களின் இரு மொழித் தேவைகளை வழங்குதல்.

## நோக்கங்கள்

ஆணைக்குழுவின் பொது நோக்கங்கள் பின்வருமாறு.

(அ) அரசகரும மொழிக் கொள்கையின் பயன்பாடு தொடர்பில் கொள்கை ரீதியான அடிப்படைக் கோட்பாடுகளை சிபாரிசு செய்தல் மற்றும் அரசியலமைப்பின் IV ஆம் அத்தியாயத்தில் உள்ளடக்கப்பட்டுள்ள ஏற்பாடுகளுக்கு அமைவாக செயற்படுகின்றமை குறித்து விழிப்புடன் செயற்படுதல் மற்றும் கண்காணித்தல்.

(ஆ) அரசியலமைப்பின் 18 ஆம் உறுப்புரையில் குறிப்பிடப்பட்டுள்ள மொழிப் பிரயோகம், அரசியலமைப்பின் IV ஆம் அத்தியாயத்தின் தாற்பரியம் மற்றும் நோக்கத்திற்கு ஏற்ப மேற்கொள்ளப்படுவதைப் பொறுப்புடன் பார்த்துக் கொள்வதற்கு அவசியமாகக் கூடிய சகல செயற்பாடுகளையும் நடவடிக்கைகளையும் மேற்கொள்ளல்.

(இ) அரசகரும மொழிகள் மதிப்பீடு, ஊக்குவிப்பு மற்றும் அவற்றின் அந்தஸ்து, சமத்துவம் மற்றும் பிரயோகிக்கும் உரிமையினை வரவேற்றல், நடைமுறைப்படுத்திச் செல்லல் மற்றும் முன்னெடுத்துச் செல்லல்.

(ஈ) தனது நெறிப்படுத்தல் மற்றும் கிடைக்கப்பெறும் ஏதேனும் முறைப்பாடுகளுக்குப் பதில் வழங்குதல் ஆகிய இரண்டு முறைகளிலும் விசாரணைகளை நடாத்துதல் மற்றும் இந்தச் சட்டத்தின் ஏற்பாடுகளில் குறிப்பிடப்பட்டிருப்பதைப் போல் நிவாரணங்களைப் பெற்றுக் கொடுக்க ஏற்பாடு செய்தல்.

## பிரதான பணிகள்

| | | | |
|---|---|---|---|
| அரசகரும மொழிகளின் பிரயோகம் தொடர்பில் அரசியலமைப்பின் ஏற்பாடுகள் அரச பொறிமுறையினால் சரியான முறையில் பின்பற்றப்படுகின்றனவா என்பது குறித்த | அரசியலமைப்பில் உள்ளடக்கப்பட்டிருக்கும் மொழி உரிமைகளை மீறல் தொடர்பான முறைப்பாடுகள் | ஏற்புடைய மொழிகளின் அந்தஸ்து அல்லது பிரயோகம் தொடர்பில் விழிப்புணர்வூட்டல் | கொள்கை ரீதியான கோட்பாடுகளை வகுத்தல் |
| கண்காணிப்பு | விசாரணை | கல்வி | ஆலோசனை |









## நிறுவனக் கட்டமைப்பு

சனாதிபதி அவர்களினால் அரசகரும மொழிகள் ஆணைக்குழு நியமிக்கப்படும். ஆணைக்குழுவானது ஆறு உறுப்பினர்களைக் கொண்டமைந்துள்ளது. ஒரு உறுப்பினர் ஆணைக்குழுவின் தலைவராக நியமிக்கப்படுவார். தலைவர் ஆணைக்குழுவின் பிரதான நிறைவேற்று அதிகாரியுமாவார்.

**2020/01/22 ஆம் திகதி நியமிக்கப்பட்ட ஆணைக்குழு பின்வரும் உறுப்பினர்களைக் கொண்டமைந்திருந்தது.**

1. சட்டத்தரணி டீ. கலன்சூரிய (தலைவர்)
2. பேராசிரியர் சந்தகோமி கோப்பரஹேவா (கொழும்பு பல்கலைக்கழகம்)
3. பேராசிரியர் ரதிராணி யோகேந்திரராஜா (யாழ்ப்பாண பல்கலைக்கழகம்)
4. பேராசிரியர் துஷ்யந்தி மெண்டிஸ் (கொழும்பு பல்கலைக்கழகம்)
5. கலாநிதி கவிதா ராஜரத்னம் (களனி பல்கலைக்கழகம்)
6. வசந்த ஏக்கநாயக்க (முன்னாள் செயலாளர் - கலாசார, கலை மற்றும் புத்தசாசன அமைச்சு)

இந்தக் காலப்பகுதியில் இலங்கை நிர்வாக சேவையின் (1) ஆம் வகுப்பைச் சேர்ந்த உத்தியோகத்தரான அரசகரும மொழிகள் ஆணையாளர் திருமதி. செனோஜி ருவினிகா பெரேரா உத்தியோகபூர்வ ரீதியாக ஆணைக்குழுவின் செயலாளராக செயற்பட்டார்.

## 2022/12/31 ஆம் திகதியில் அரசகரும மொழிகள் ஆணைக்குழுவின் நிறுவனக் கட்டமைப்பு



## 2022.12.31 ஆம் திகதியாகும் போது ஆணைக்குழுவில் கடமையாற்றிய பணியாட்டொகுதியினர்

| தொடரிலக்கம் | பதவிப் பெயர் | அங்கீகரிக்கப்பட்ட பதவியணி | பதவியணியின் உண்மையான எண்ணிக்கை | குறிப்பு |
|---|---|---|---|---|
| 01. | பணிப்பாளர் | 01 | - | வெற்றிடங்கள் 01 |
| 02. | உதவிப் பணிப்பாளர் | 01 | 01 | |
| 03. | மொழி அதிகாரி | 03 | 01 | வெற்றிடங்கள் 02 |
| 04. | நிர்வாக உத்தியோகத்தர் | 01 | 01 | |
| 05. | நிதி அதிகாரி | 01 | - | வெற்றிடங்கள் 01 |
| 05. | பிரதான எழுதுவினைஞர் | 01 | 01 | |
| 06. | மொழி மேம்பாட்டு மற்றும் விசாரணை அதிகாரி | 10 | 04 | வெற்றிடங்கள் 06 |
| 07. | அபிவிருத்தி உத்தியோகத்தர் | 04 | 03 | வெற்றிடங்கள் 01 |
| 08. | முகாமைத்துவ உதவியாளர் | 10 | 08 | வெற்றிடங்கள் 02 |
| 09. | மொழிபெயர்ப்பாளர் (தமிழ்/ ஆங்கிலம்) | 01 | - | வெற்றிடங்கள் 01 |
| 10. | மொழிபெயர்ப்பாளர் (சிங்களம்/ ஆங்கிலம்) | 01 | - | வெற்றிடங்கள் 01 |
| 11. | மொழிபெயர்ப்பாளர் (சிங்களம்/ தமிழ்) | 01 | - | வெற்றிடங்கள் 01 |
| 12. | சாரதி | 03 | 02 | வெற்றிடங்கள் 01 |
| 13. | அலுவலக உதவியாளர் | 04 | 03 | வெற்றிடங்கள் 01 |
| | **மொத்த எண்ணிக்கை** | **42** | **24** | **வெற்றிடங்கள் 18** |



## ஆணைக் குழு

| கூட்டத் திகதி |
|---|
| 2022.01.31 |
| 2022.02.28 |
| 2022.03.15 |
| 2022.04.29 |
| 2022.05.26 |
| 2022.06.28 |
| 2022.07.27 |
| 2022.08.30 |
| 2022.10.25 |
| 2022.10.28 |
| 2022.11.03 |
| 2022.12.01 |
| 2022.12.14 |

**தேசிய மொழிகள் சமத்துவ மேம்பாட்டுச் செயற்றிட்டத்துடன் (NLEAP) இணைந்து நடைமுறைப்படுத்தப்பட்ட நிகழ்ச்சித் திட்டங்கள்**

## I. பாடசாலை பிள்ளைகளுக்கென ஒதுக்கப்பட்ட நாடளாவிய கட்டுரைப் போட்டிக்கான சான்றிதழ் வழங்கும் வைபவத்தை நடாத்துதல்.

2021 ஆம் ஆண்டில் பாடசாலை பிள்ளைகளுக்கென நாடளாவிய கட்டுரைப் போட்டி நடாத்தப்பட்டது. இந்தக் கட்டுரைப் போட்டியானது சிங்கள, தமிழ் மற்றும் ஆங்கில மொழிகளில் நடாத்தப்பட்டது.





**கட்டுரைப் போட்டிக்கான சான்றிதழ் வழங்கல்**

## II. ஆராய்ச்சி முறைகள் மற்றும் ஆய்வுகள் குறித்த ஆரம்ப செயலமர்வை நடாத்தல்

அரசகரும மொழிகள் ஆணைக்குழுவின் உத்தியோகத்தர்கள் ஆராய்ச்சி முறைகள் மற்றும் ஆய்வுகள் தொடர்பான அறிவைக் கொண்டிருத்தல் அத்தியாவசியமான விடயமாகும். ஆணைக்குழுவினால் அரசகரும மொழிக் கொள்கையை நடைமுறைப்படுத்தல் தொடர்பில் பல்வேறு ஆய்வுகள் மேற்கொள்ளப்படல் மற்றும் தரவுப் பகுப்பாய்வானது ஆணைக்குழு பரிந்துரைகளை வகுப்பதற்கு அத்தியாவசியமாகின்றமையே இதற்குக் காரணமாகும். தேசிய மொழிகள் சமத்துவ மேம்பாட்டுச் செயற்றிட்டத்தினால் (NLEAP) ஆரம்பிக்கப்பட்ட இந்த செயலமர்வு மூலம் அரசகரும மொழிகள் ஆணைக்குழு உத்தியோகத்தர்களின் ஆராய்ச்சி மற்றும் ஆய்வுகள் குறித்த இயலளவு விருத்தி எதிர்பார்க்கப்படுகிறது.

## III. பாலின சமத்துவம் குறித்து விழிப்புணர்வூட்டல்

அரசகரும மொழிகள் ஆணைக்குழுவின் ஒட்டுமொத்த பணிக்குழுவினருக்கு பாலின சமத்துவம் குறித்த ஒரு நாள் செயலமர்வு நடாத்தப்பட்டது. அதே போன்று ஆணைக்குழுவின் பாலின சமத்துவத்துடன் தொடர்புடைய செயற்பாடுகளை ஆரம்பிப்பதற்காக உத்தியோகத்தர்கள் நியமிக்கப்பட்டனர்.

## IV. அரசகரும மொழிக் கொள்கையை நடைமுறைப்படுவதற்கு ஏற்புடைய விசாரணைக் கைநூலாக்கம்.

அரசகரும மொழிகள் ஆணைக்குழுச் சட்டத்தில் உள்ளடங்கியுள்ள ஏற்பாடுகளின் படி முறைப்பாடுகளை விசாரணை செய்யும் முறையை விரிவாகத் தேவையான படிவங்களுடன் விசாரணைக் கைநூலொன்றாக உருவாக்கும் நூலாக்கப் பணிகள் இந்த வருடம்

ஆரம்பிக்கப்பட்டன. இந்தக் கைநூலாக்கத்திற்கான வளவாளராக கொழும்பு பல்கலைக்கழகத்தின் சட்ட பீடத்தின் முன்னாள் பீடாதிபதி பேராசிரியர் என்.செல்வக்குமாரன் அவர்கள் செயற்படுகின்றார். கைநூலாக்கத்திற்கான முதலாவது கலந்துரையாடல் இந்த வருடத்தில் இடம்பெற்றதோடு, வளவாளரினால் கைநூலாக்கப் பணிகள் ஆரம்பிக்கப்பட்டன.

## இணையத்தளத்தை அங்குரார்ப்பணம்



அரசகரும மொழிகள் திணைக்களத்தின் இணையத்தளம் செயற்படாத நிலையில் காணப்பட்டது. இது தொடர்பில் கவனம் செலுத்திய ஆணைக்குழு, தேசிய மொழிகள் சமத்துவ மேம்பாட்டுச் செயற்றிட்டத்தின் (NLEAP) ஒத்துழைப்புடன் 2021 ஆம் ஆண்டில் இணையத்தளம் மீள வடிவமைக்கப்பட்டு 2022 ஜனவரி 12 ஆம் திகதி அங்குரார்ப்பணம் செய்யப்பட்டது.

பொது நிர்வாக மாகாண சபைகள் மற்றும் உள்ளூராட்சி அமைச்சர் கௌரவ ஜனக்க பண்டார தென்னக்கோன் அவர்களின் தலைமையில் மற்றும் கனேடிய உயர் ஸ்தானிகரின் பங்களிப்புடன் 2022 ஜனவரி 12 ஆம் திகதி அமைச்சு கேட்போர் கூடத்தில் இணையத்தளம் அங்குரார்ப்பணம் செய்யப்பட்டது.

இந் நிகழ்வில் பொது நிர்வாக மாகாண சபைகள் மற்றும் உள்ளூராட்சி அமைச்சின் செயலாளர் திரு.ஜே.ஜே.ரத்னசிறி அவர்கள், ஆணைக்குழு உறுப்பினர் திரு.வசந்த ஏக்கநாயக்க, பேராசிரியர் சந்தகோமி கோப்பரஹேவா, பேராசிரியர் துஷ்யந்தி மெண்டிஸ் மற்றும் தேசிய மொழிகள் சமத்துவ மேம்பாட்டுச் செயற்றிட்டத்தின் (NLEAP) செயற்திட்டப் பணிப்பாளர் திரு. டெனல்ட் ஈ பிரவுகெல், பிரதிப் பணிப்பாளர் திருநாவுக்கரசு மற்றும் திருமதி. மல்ராஜி வன்னி ஆரச்சி ஆகியோர் கலந்து கொண்டனர்.

இணையத்தளம் மூலம் மொழி உரிமைகள் குறித்து பொது மக்களுக்குத் தகவல்களை வழங்க முடியும். அதே போன்று ஆணைக்குழுவின் வெளியீடுகள், அறிக்கைகள், வருடாந்த அறிக்கைகள் மற்றும் நடைமுறைப்படுத்தப்படும் நிகழ்ச்சித் திட்டங்களுக்கு ஏற்புடைய தகவல்களையும் பொது மக்களுக்கு வினைத்திறனாக சமர்ப்பிக்க முடியும். இதற்கு மேலதிகமாக மொழி உரிமைகள் மீறல் தொடர்பில் இணையத்தளத்தில் செட் பொட் ஊடாக பொது மக்கள் முறைப்பாடுகளை சமர்ப்பிக்கவும் முடியும்.






இணையத்தள அங்குரார்ப்பணம்

# பகுதி II

## 2022 ஆம் ஆண்டில் ஆணைக்குழுவினால் நிறைவேற்றப்பட்ட பிரதான செயற்பாடுகள்

ஆணைக்குழுவின் பிரதான பணிகளான மேற்பார்வை, விசாரணை, கல்வி/விழிப்புணர்வூட்டல் மற்றும் ஆலோசனையுடன் தொடர்புடைய பின்வரும் செயற்பாடுகள் இந்த வருடத்தில் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

1. **மேற்பார்வை** ⟹ மொழிக் கணிப்பாய்வு/புகையிரத நிலையங்களின் அறிவித்தல்களைப் பரிசீலித்தல்/விசேட ஆய்வுகளை மேற்கொள்ளல்
2. **விசாரணை** ⟹ பொதுமக்கள் முறைப்பாடுகள் மற்றும் தமது நெறிப்படுத்தலினால் இனங்காணப்படும் மொழி உரிமை மீறல்கள் தொடர்பான நடவடிக்கைகளை எடுத்தல்
3. **கல்வி/விழிப்புணர்வூட்டல்** ⟹ பொதுமக்கள், அரச உத்தியோகத்தர்கள், பகுதியளவிலான அரச நிறுவனங்களின் உத்தியோகத்தர்கள் மற்றும் பாடசாலை பிள்ளைகளுக்கு விழிப்புணர்வூட்டல் நிகழ்ச்சித் திட்டங்களை நடாத்தல்
4. **ஆலோசனை** ⟹ அரசாங்கத்திற்குப் பரிந்துரைகளை வழங்கல்.

## 1. மேற்பார்வை

❖ மொழிக் கணிப்பாய்வுகளை மேற்கொள்ளல்

அரச மற்றும் பகுதியளவிலான அரச நிறுவனங்களில் அரசகரும மொழிக் கொள்கை நடைமுறைப்படுத்தலை மேற்பார்வை செய்வதற்கு மொழிக் கணிப்பாய்வுகள் மேற்கொள்ளப்பட்டன. மொழிக் கணிப்பாய்வுகளுக்கு நிறுவனங்களைத் தெரிவு செய்கையில் பின்வரும் விடயங்கள் தொடர்பில் விசேட கவனம் செலுத்தப்பட்டது.

- பொதுமக்களுக்கு சேவைகளை வழங்குதல்.
- நிறுவனம் அமைந்துள்ள பிரதேச செயலாளர் பிரிவின் பொதுமக்கள் கூட்டமைவு
- முந்தைய ஆண்டுகளில் மொழிக் கணிப்பாய்வுகள் மேற்கொள்ளப்பட்டிருத்தல்.
- பொதுமக்கள் முறைப்பாடுகள் சமர்ப்பிக்கப்பட்டுள்ள நிறுவனங்கள்
- ஆணைக்குழுவினால் விழிப்புணர்வூட்டல் நிகழ்ச்சித் திட்டங்கள் நடாத்தப்பட்டுள்ள நிறுவனங்கள்
- விசேட சேவைகளை வழங்கும் நிறுவனங்கள்

அரசகரும மொழிக் கொள்கைக்கு அமைவாக அரச நிறுவனங்கள் பொதுமக்களுக்கு சேவையை வழங்குகின்றதா என்பது தொடர்பில் மொழிக் கணிப்பாய்வுகளின் போது பரிசீலிக்கப்பட்டன.

**இப் பரிசீலனையின் போது பின்வரும் அளவுகோல்கள் பயன்படுத்தப்பட்டன.**

1. நிறுவன வளாகத்தில் பொதுமக்களுக்குக் காட்சிப்படுத்தப்படும் அனைத்துப் பலகைகள். (பெயர்ப் பலகைகள், தகவற் பலகைகள், அறிவுறுத்தற் பலகைகள்)
2. பொதுமக்கள் சேவைக்காகப் பயன்படுத்தப்படும் அனைத்து ஆவணங்கள்
3. அரசகரும மொழிக் கொள்கை தொடர்பான விழிப்புணர்வு
4. உத்தியோகத்தர்களின் இரு மொழி ஆற்றல்
5. சிங்கள/தமிழ் பயிற்சிப் பாடநெறிகளை நடாத்துதல்
6. உத்தியோகத்தர்களின் மொழித் தேர்ச்சி
7. இணையத்தளம்
8. மொழிபெயர்ப்பு நடவடிக்கைகள்
9. முகப்பு அலுவலகப் பின்னணி
10. நிறுவனத்துடன் தொடர்புடைய விசேடமான விடயங்கள் (உ-ம் :- பொலிஸ் நிலையங்கள் - முறைப்பாடுகளைப் பதிவு செய்தல், பிறப்பு/விவாக/மரண பதிவாளர் - சான்றிதழ்களை அரசகரும மொழிகளில் வழங்குதல்)

மேற்குறித்த அளவுகோல்களுக்கு அமைய தரவுகளைத் திரட்டுவதற்கு மொழிக் கணிப்பாய்வுகளின் போது வினாக்கொத்துக்கள் பயன்படுத்தப்பட்டன. அதற்கு மேலதிகமாக இடம்சார் அவதானிப்புக்களை (பெயர்ப் பலகைகள், தகவற் பலகைகள்) மேற்கொண்டு, தேவையான புகைப்படங்களை எடுத்தல், உத்தியோகத்தர்களை சந்தித்து தகவல்களைப் பெற்றுக் கொள்ளல், நிறுவனத்தில் அமைந்துள்ள பிரிவுகளை பரிசீலித்தல் என்பன மொழிக் கணிப்பாய்வுகளின் போது மேற்கொள்ளப்பட்டன.

மொழிக் கணிப்பாய்வுகளை ஏற்பாடு செய்கையில் தெரிவு செய்யப்பட்ட நிறுவனங்களுக்கு அறிவித்து, திகதிகள் ஒதுக்கிக் கொள்ளப்பட்டன. கணிப்பாய்வுகளை மேற்கொள்ளும் நிறுவனத்தில் தகவல்களைப் பெற்றுக் கொள்வதற்கான முன் ஏற்பாடுகளை செய்வதற்காகவே இவ்வாறு முன்னறிவித்தல் செய்யப்படுகின்றது. ஆணைக்குழுவின் மொழி அதிகாரிகள் மற்றும் மொழி மேம்பாட்டு மற்றும் விசாரணை அதிகாரிகளைக் கொண்டமைந்த

குழுவொன்று கணிப்பாய்வில் கலந்து கொண்டதோடு, 2022 ஆம் ஆண்டு மேற்கொள்ளப்பட்ட மொழிக் கணிப்பாய்வுகள் பற்றிய தகவல்கள் பின்வரும் அட்டவணையில் தரப்பட்டுள்ளன.

| தொடரிலக்கம் | நிறுவனத்தின் பெயர் | திகதி |
|---|---|---|
| 1. | பிரதேச செயலகம் - களுத்துறை | 2022/01/25 |
| 2. | இலங்கை வங்கி – களுத்துறை | 2022/01/26 |
| 3. | மக்கள் வங்கி – களுத்துறை | 2022/01/26 |
| 4. | பொலிஸ் நிலையம் – களுத்துறை தெற்கு | 2022/01/26 |
| 5. | தெற்கு அதிவேக நெடுஞ்சாலை | 2022/02/22 |
| 6. | பிரதேச செயலகம் - அம்பாந்தோட்டை | 2022/02/23 |
| 7. | மாவட்ட செயலகம் - அம்பாந்தோட்டை | 2022/02/23 |
| 8. | நகர சபை - அம்பாந்தோட்டை | 2022/02/24 |
| 9. | பொலிஸ் நிலையம் – அம்பாந்தோட்டை | 2022/02/24 |
| 10. | பொலிஸ் நிலையம் – திஸ்ஸ மஹாராமய | 2022/02/24 |
| 11. | அத்துருகிரியவிலிருந்து கெரவலப்பிட்டி வரையான அதிவேக நெடுஞ்சாலை | 2022/09/06 |
| 12 | பேலியகொடவிலிருந்து கட்டுநாயக்க வரையான அதிவேக நெடுஞ்சாலை | 2022/09/07 |
| 13 | மாவட்ட செயலகம் - காலி | 2022/09/26 |
| 14 | பிரதான செயலாளர் காரியாலயம் - காலி | 2022/09/27 |

| | | |
|---|---|---|
| 15 | நகர சபை - காலி | 2022/09/27 |
| 16 | பிரதேச செயலகம் - காலி | 2022/09/27 |
| 17 | ஆதார வைத்தியசாலை - கராப்பிட்டி | 2022/09/28 |
| 18 | மீரிகம அதிவேக நெடுஞ்சாலை | 2022/11/24 |



***களுத்துறை பொலிஸ்நிலையம்***

***காலி, கராப்பிட்டி பொது வைத்தியசாலை***



### ❖ புகையிரத அறிவித்தல்களைப் பரிசீலித்தல்

புகையிரத நிலையங்களில் மும்மொழிகளிலும் அறிவித்தல்கள் செய்யப்படாமை குறித்து ஆணைக்குழுவிற்குத் தொடர்ச்சியாக முறைப்பாடுகள் கிடைத்த வண்ணம் உள்ளன. இந் நிலைமையை சீராக்குவதன் பொருட்டு புகையிரத அறிவித்தல்கள் மும்மொழிகளிலும் வழங்கப்படுகின்றனவா என்பது குறித்து ஆணைக்குழுவினால் அவதானிக்கப்படும். இதன் போது ஆணைக்குழுவின் விசாரணை அதிகாரிகள் புகையிரதத்தில் பயணம் செய்வதோடு, புகையிரதம் நிறுத்தப்படும் புகையிரத நிலையங்களில் அறிவித்தல்கள் வழங்கப்படும் முறையானது அவர்களால் குறித்துக் கொள்ளப்படும். இவ்வாறு குறித்துக் கொள்ளப்படும் தகவல்கள் உள்ளடங்கிய அறிக்கை ஒன்றை புகையிரத நிலைய பொது முகாமையாளர் மற்றும் ஏற்புடைய புகையிரத நிலையப் பொறுப்பதிகாரிகளிடம் சமர்ப்பித்து அவதானிப்புக்கள் கோரப்படும். இந்த ஆண்டு 136 புகையிரத நிலையங்கள் இவ்வாறு ஆய்வுக்கு உட்படுத்தப்பட்டன.

## 2. விசாரணை

**ஆணைக்குழுவானது இரண்டு முறைகளில் விசாரணைகளை மேற்கொள்கிறது.**

**விசாரணை**

தனது வழிகாட்டலின் கீழ் கண்டறியப்படும் அரசகரும மொழிக் கொள்கை மீறல்கள் குறித்த விசாரணை

மொழி உரிமை மீறல்கள் தொடர்பில் கிடைக்கப்பெறும் பொதுமக்கள் முறைப்பாடுகள் குறித்த விசாரணை

❖ பொதுமக்கள் முறைப்பாடுகள் குறித்த விசாரணை

அரசகரும மொழிக் கொள்கை மீறப்படல் தொடர்பில் கிடைக்கப்பெறும் பொதுமக்கள் முறைப்பாடுகள் மீதான விசாரணைக்கென ஆணைக்குழுச் சட்டத்தின் மூலம் விசேட அதிகாரங்கள் ஆணைக்குழுவிற்கு உரித்தாகியுள்ளன. முறைப்பாடுகள் மீதான விசாரணையானது ஆணைக்குழுவின் ஒரு பிராதன பணியாவதோடு, பின்வரும் முறைகளில் ஆணைக்குழுவிடம் முறைப்பாடுகள் சமர்ப்பிக்கப்படுகின்றன.



2022 ஆம் ஆண்டில் மொழி உரிமை மீறல் தொடர்பான 53 பொதுமக்கள் முறைப்பாடுகள் ஆணைக்குழுவிற்குக் கிடைக்கப்பெற்றுள்ளன. முந்தைய வருடங்களில் ஆணைக்குழுவிற்குக் கிடைக்கப்பெற்று, விசாரணைகள் ஆரம்பிக்கப்பட்ட முறைப்பாடுகளும் உள்ளடங்கலாக 45 முறைப்பாடுகள் மீதான விசாரணை நடவடிக்கைகள் 2022 ஆம் ஆண்டில் பூர்த்தியாக்கப்பட்டன. குறித்த முறைப்பாடுகள் கிடைக்கப்பெற்ற வருடங்களிற்கு அமைவான வகைப்படுத்தல் பின்வரும் வரைபு மூலம் தெளிவாகும்.

## 2022




2022 ஆம் ஆண்டு பூர்த்தி செய்யப்பட்ட சில விசேடமான முறைப்பாடுகளுக்குரிய தகவல்கள் பின்வரும் அட்டவணையில் உள்ளடக்கப்பட்டுள்ளன.

| முறைப்பாடு | எடுக்கப்பட்ட நடவடிக்கைகள் |
|---|---|
| இலங்கை ரூபவாஹினி கூட்டுத்தாபனத்தின் இலச்சினையிலிருந்து தமிழ் மற்றும் ஆங்கில மொழிகள் நீக்கப்பட்டு சிங்கள மொழியில் மாத்திரம் காட்சிப்படுத்தல். | இலங்கை ரூபவாஹினி கூட்டுத்தாபனத்தின் தலைவரிடமிருந்து அவதானிப்புக்கள் கோரப்பட்டு மீண்டும் ரூபவாஹினி இலச்சினையை மும்மொழிகளிலும் வடிவமைப்பதற்குத் தேவையான பரிந்துரைகள் வழங்கப்பட்டன. அதற்கமைய இலங்கை ரூபவாஹினி கூட்டுத்தாபனத்தின் உத்தியோகபூர்வ இலச்சினை மும்மொழிகளிலும் வடிவமைக்கப்பட்டு காட்சிப்படுத்தப்படுகிறது. |
| மின் துண்டிப்பிற்கான சிவப்பு அறிவித்தலானது இலங்கை மின்சார சபையினால் ஆங்கில மொழியில் மாத்திரம் பொதுமக்களுக்கு வழங்கப்படுதல். | இலங்கை மின்சார சபையின் தலைவரிடமிருந்து அவதானிப்புக்கள் கோரப்பட்டு மின் துண்டிப்பு அறிவித்தலை மும்மொழிகளிலும் சரியாக தயாரிப்பதற்குத் தேவையான பரிந்துரைகள் வழங்கப்பட்டுள்ளன. |
| கொழும்பு பொது வைத்தியசாலைக்கு சீனாவினால் வழங்கப்பட்டுள்ள, பொதுமக்கள் பாவனைக்காக இன்னும் திறந்து வைக்கப்படாத கட்டிடத்தை அறிமுகம் செய்வதற்காகக் காட்சிப்படுத்தப்பட்டுள்ள பலகையானது ஆங்கில மொழியில் மாத்திரம் வடிவமைக்கப்பட்டுள்ளமை மற்றும் சிங்கள மற்றும் தமிழ் மொழிகளில் பலகைகள் வடிவமைக்கப்படாமை. | இது தொடர்பில் கொழும்பு தேசிய வைத்தியசாலையின் பணிப்பாளரிடமிருந்து அவதானிப்புக்கள் கோரப்பட்டு ஏற்புடைய கட்டிடத்தில் காட்சிப்படுத்தப்பட்டுள்ள பலகையில் சிங்கள மற்றும் தமிழ் மொழிகளை உள்ளடக்கி வடிவமைப்பதற்கான பரிந்துரைகள் வழங்கப்பட்டுள்ளன. |
| கண்டி மாநகர சபைக்குச் சொந்தமான வர்த்தகத் தொகுதியில் “Mahanuawara Commercial Complex” என ஆங்கில மொழியில் மாத்திரம் காட்சிப்படுத்தப்பட்டுள்ளமை மற்றும் அதில் சிங்கள மற்றும் தமிழ் மொழிகளும் உள்ளடக்கப்பட வேண்டும் | இது தொடர்பில் கண்டி மாநகர சபையின் நகர ஆணையாளரிடமிருந்து அவதானிப்புக்கள் கோரப்பட்டு ஏற்புடைய வர்த்தகத் தொகுதியில் காட்சிப்படுத்தப்பட்டுள்ள பெயரை மும்மொழிகளிலும் வடிவமைப்பதற்குத் தேவையான பரிந்துரைகள் வழங்கப்பட்டுள்ளன. |

## 3. கல்வி/விழிப்புணர்வூட்டல்

இதன் கீழ் அரசகரும மொழிக் கொள்கை குறித்து உரிய திறத்தவருக்கு விழிப்புணர்வூட்டுவதற்கான நிகழ்ச்சித் திட்டங்கள் நடைமுறைப்படுத்தப்படுகின்றன. 2022 ஆம் ஆண்டில் இவ் விழிப்புணர்வூட்டலின் பொருட்டு முதன்மையாகப் பின்வரும் திறத்தவர்கள் தெரிவு செய்யப்பட்டுள்ளனர்.

I. திணைக்களத் தலைவர்கள் (பிரதேச செயலாளர் பிரிவு மட்டத்தில்)
II. பொதுமக்களுக்கு விசேட சேவைகளை வழங்கும் அரச திணைக்களங்களைச் சார்ந்த உத்தியோகத்தர்கள்
III. மொழிக் கணிப்பாய்வு மேற்கொள்ளப்பட்ட நிறுவனங்களின் உத்தியோகத்தர்கள் (பொலிஸ் நிலையங்கள், பிரதேச செயலகங்கள்)
IV. பகுதியளவிலான அரச நிறுவனங்களின் உத்தியோகத்தர்கள்
V. பொதுமக்கள்
VI. பாடசாலை மாணவர்கள்

விழிப்புணர்வூட்டல் நிகழ்ச்சித் திட்டங்களின் போது அரசகரு மொழிக் கொள்கை தொடர்பிலான உத்தியோகத்தர்களின் சட்ட ரீதியான கடமை குறித்தே அரச மற்றும் பகுதியளவிலான அரச நிறுவனங்களின் உத்தியோகத்தர்களுக்கு விழிப்புணர்வூட்டப்படும். சேவைகளை வழங்கும் துறையின் திறத்தவர் என்ற வகுதிக்குள் உத்தியோகத்தர்கள் உள்ளடங்குவர். பிரசைகள் என்ற வகையில் அவர்களுக்குள்ள மொழி உரிமைகள் குறித்தே இதன் போது விசேட கவனம் செலுத்தப்படும்.

அரச உத்தியோகத்தர்களுக்கு விழிப்புணர்வூட்டும் போது செயலமர்வுகள், கருத்தரங்குகள் மற்றும் குறுகிய காணொளி நிகழ்ச்சிகள் உபயோகப்படுத்தப்பட்டன. அதே போன்று விழிப்புணர்வூட்டலின் வினைத்திறனை மேம்படுத்துவதற்கு நிகழ்நிலை முறையிலும் உத்தியோகத்தர்களுக்கு விழிப்புணர்வூட்டப்பட்டது.

பிரசைகளின் மொழி உரிமைகள் தொடர்பில் விழிப்புணர்வூட்டுவதற்குப் பிரதானமாக வெகுசன ஊடகங்கள் பயன்படுத்தப்படுகின்றன. (மொழி உரிமைகள் தொடர்பில் பொதுமக்களிடம் காணப்படும் விழிப்புணர்வை மேலும் விருத்தி செய்தல் வேண்டும் என்பதே ஆணைக்குழுவினால் மேற்கொள்ளப்பட்ட அவதானிப்புக்கள் மூலம் வெளிப்பட்ட ஒரு விடயமாகும்.)

**இந்த வருடத்தில் ஆணைக்குழுவினால் நடைமுறைப்படுத்தப்பட்ட விழிப்புணர்வூட்டல் நிகழ்ச்சித் திட்டங்கள் பின்வரும் அட்டவணையில் காட்டப்பட்டுள்ளன.**

| தொடரிலக்கம் | நிறுவனத்தின் பெயர் | திகதி |
|---|---|---|
| 01 | பிரதேச செயலகம் - களுத்துறை | 2022/01/25 |
| 02 | அரசகரும மொழிகள் ஆணைக்குழுவின் இணையத்தளத்தை அங்குரார்ப்பணம் செய்தல் | 2022/0112 |
| 03 | சர்வதேச தாய்மொழித் தினத்தை முன்னிட்டு இடம்பெற்ற நேர்காணல் | 2022/02/21 |
| 04 | சிங்கள மொழித் தினத்தை முன்னிட்டு பத்திரிகை விளம்பரங்களைப் பிரசுரித்தல் | 2022/03/02 |
| 05 | நேத்ரா அலைவரிசை ஊடாக இடம்பெற்ற நேர்காணல் | 2022/06/27 |
| 06 | இலங்கை ஒலிபரப்புக் கூட்டுத்தாபனத்தின் சுபாரதீ நிகழ்ச்சி ஊடாக இடம்பெற்ற நேர்காணல் | 2022/07/01 |
| 07 | மேல் மாகாணத்தின் மாவட்ட செயலகங்கள் மற்றும் பிரதேச செயலகங்களில் உள்ள உத்தியோகத்தர்களுக்கு விழிப்புணர்வூட்டல் | 2022/07/18 |
| 08 | மஹரகம இளைஞர் சேவைகள் சபையில் நடாத்தப்பட்ட விழிப்புணர்வூட்டல் நிகழ்ச்சித் திட்டம் | 2022/09/01 |
| 09 | காலி மாவட்டத்தின் பிரதேச செயலகங்கள் | 2022/10/25 |
| 10 | மாத்தறை மற்றும் அம்பாந்தோட்டை மாவட்டங்களில் பிரதேச செயலகங்களிலிருந்து தெரிவு செய்யப்பட்ட உத்தியோகத்தர்களுக்கு விழிப்புணர்வூட்டல் | 2022/11/30 |



களுத்துறை பிரதேச செயலகத்தின் உத்தியோகத்தர்களுக்கு விழிப்புணர்வூட்டல்





காலி மாவட்ட பிரதேச செயலகத்தின் உத்தியோகத்தர்களுக்கு விழிப்புணர்வூட்டல் நிகழ்நிலை நிகழ்ச்சித் திட்டம்






இலங்கை ஒலிபரப்புக் கூட்டுத்தாபனத்தின் சுபாரதீ நிகழ்ச்சி

- ❖ பாடசாலை மொழிகள் மேம்பாட்டுத்தர வட்டங்கள்

இரண்டாம் மொழித் தேர்ச்சியுடனான உத்தியோகத்தர்கள் பற்றாக்குறையே அரச சேவையில் அரசகரும மொழிக் கொள்கையை நடைமுறைப்படுத்துவதில் காணப்படும் பிரதானமான சிக்கலாகும். தற்போது அரச சேவையில் உள்ள உத்தியோகத்தர்கள் பாடசாலைக் கல்வியின் போது தாய்மொழி மற்றும் ஆங்கில மொழியை மாத்திரமே கற்றுக் கொண்டுள்ளமையே இதற்குக் காரணமாகும்.

தற்போது பாடசாலைக் கல்வி மூலம் தாய்மொழி, இரண்டாம் மொழி மற்றும் ஆங்கில மொழியைக் கற்பதற்கான வாய்ப்பு ஏற்படுத்தப்பட்டுள்ளது. தரம் 09 வரை மாத்திரமே இரண்டாம் மொழியைக் கற்றுக் கொள்ளக் கூடியதாக இருப்பினும் இந்த முறையின் ஊடாக மும்மொழிகளிலும் குறிப்பிடத்தக்கதொரு தேர்ச்சியினைப் பெற்றுக் கொள்ளும் வாய்ப்பு பாடசாலை மாணவர்களுக்குக் கிட்டியுள்ளது.

பாடசாலைக் கல்வியில் காணப்படும் இந்தப் புதிய போக்கைக் கருத்திற் கொண்டு கல்வி அமைச்சுடன் கலந்துரையாடி பாடசாலைகளில் மொழிகள் மேம்பாட்டுத்தர வட்டங்களை நிறுவுவது குறித்த புதியதொரு நிகழ்ச்சித் திட்டத்தை ஆரம்பிப்பதற்கு ஆணைக்குழு நடவடிக்கைகளை மேற்கொண்டது. அதற்கமைவாக கல்வி அமைச்சின் மூலம் பாடசாலை மொழிகள் மேம்பாட்டுத்தர வட்டத்தை நிறுவுதல் எனும் தலைப்பில் 2015.08.14 ஆம் திகதி சுற்றறிக்கையொன்று வெளியிடப்பட்டது. பாடசாலை மொழிகள் மேம்பாட்டுத்தர வட்டத்தை நிறுவுவதற்கான நோக்கங்கள்,

I. இரு மொழிகளுடன் இதயபூர்வமாக இணைந்த ஒரே இலங்கையர் என்ற இனமொன்றை உருவாக்கும் நோக்கத்தில் மாணவர் சமுதாயத்தை ஈடுபடுத்தல்.
II. பாடசாலை பிள்ளைகளிடத்தில் மும்மொழி பிரயோகம் தொடர்பான மனப்பாங்கு மற்றும் ஆர்வத்தை ஏற்படுத்தல்.
III. பாடசாலையில் கேட்டல், பார்த்தல், வாசித்தல் ஆகிய செயற்பாடுகளை மும்மொழிகளிலும் மேற்கொள்ளல்.
IV. தாய்மொழி, இரண்டாம் தேசிய மொழியொன்றாக சிங்களம் அல்லது தமிழ் மொழிகள் மற்றும் இணைப்பு மொழியான ஆங்கில மொழி என்ற மூன்று மொழிகளையும் செயன்முறை ரீதியில் பயன்படுத்துவதற்கு ஊக்கப்படுத்தல்.
V. வகுப்பறையில் கோட்பாடு ரீதியாகக் கற்கும் மொழிகளை செயன்முறை ரீதியில் பிரயோகிக்கும் ஆற்றலைப் பெற்றுக் கொள்ளல்.
VI. அனைத்து இணைப் பாடவிதான நடவடிக்கைகளிலும் செயன்முறை ரீதியில் மும்மொழிகளைப் பயன்படுத்தி நிகழ்ச்சித் திட்டங்களை ஒழுங்குப்படுத்தல். உ-ம் : விளையாட்டு நடவடிக்கைகள், கூட்டங்கள்.

மேற்குறித்த நோக்கங்களை அடைவதன் பொருட்டு ஆரம்பிக்கப்பட வேண்டிய செயற்பாடுகளும் இச் சுற்றறிக்கையில் உள்ளடங்கியுள்ளன. மேற்குறித்த சுற்றறிக்கை பிரகாரம் பாடசாலையில் பாடசாலைகளில் மொழிகள் மேம்பாட்டுத்தர வட்டங்களை ஊக்குவித்தல் தொடர்பில் அரசகரும மொழிகள் ஆணைக்குழுவினால் நிகழ்ச்சித் திட்டங்கள் நடைமுறைப்படுத்தப்படுகின்றன.

**இந்த ஆண்டில் அவ்வாறான இரண்டு நிகழ்ச்சித் திட்டங்கள் ஆணைக்குழுவினால் மேற்கொள்ளப்பட்டன. அவையாவன,**

I. அரசகரும மொழிகள் வாரத்திற்கு இணையாக அரசகரும மொழிகள் ஆணைக்குழுவினால் நடாத்தப்பட்ட சிறுகதை போட்டிக்கான பரிசில்கள் வழங்கும் நிகழ்வு பத்தரமுல்ல வோட்டர்ஸ் எட்ஜ் ஹோட்டலில் இடம்பெற்றது – 2022.08.24

II. தமிழ்மொழித் தினத்திற்கு இணையாக தமிழ் கலாசார நிகழ்வுகளும் உள்ளடங்கலாக பாடசாலை மொழிகள் மேம்பாட்டுதர வட்டங்கள் குறித்து விழிப்புணர்வூட்டும் நிகழ்ச்சித் திட்டமொன்று இலங்கை மன்றத்தில் நடாத்தப்பட்டது – 2022.10.28



***கட்டுரைப் போட்டிக்கான சான்றிதழ்கள் வழங்கல்***



***தமிழ்மொழித் தினம்***

## 4. ஆலோசனை

❖ **அரசகரும மொழிக் கொள்கையை நடைமுறைப்படுத்தலுடன் தொடர்புடைய மும்மொழி வழிகாட்டி நூல்**

அரசகரும மொழிக் கொள்கையை ஒழுங்குப்படுத்துவதற்கு ஆணைக்குழுவினால் இனங்காணப்பட்ட 10 அளவுகோல்கள் காணப்படுகின்றன. குறித்த அளவுகோல்களை உள்ளடக்கி வழிகாட்டி நூல் ஒன்று ஆணைக்குழுவினால் தொகுக்கப்பட்டுள்ளது. அனைத்து அரச நிறுவனங்களும் இந்த வழிகாட்டிக் கோவையை ஒரு கையேடாகப் பயன்படுத்தலாம். ஆணைக்குழுவினால் நடாத்தப்படும் விழிப்புணர்வூட்டல் நிகழ்ச்சித் திட்டங்களின் போது மற்றும் கணிப்பாய்வுகளின் போது ஒவ்வொரு நிறுவனத்திற்கும் இந்த வழிகாட்டி நூல் பிரதியொன்றை வழங்க உத்தேசிக்கப்பட்டுள்ளது.




**வழிகாட்டி நூல்**

**நடைமுறைப்படுத்தப்பட்ட நிகழ்ச்சித் திட்டங்கள்**

**I. நிகழ்நிலை முறை ஊடாக விழிப்புணர்வூட்டல் நிகழ்ச்சித் திட்டங்களை நடாத்தல்**

அரசகரும மொழிகள் ஆணைக்குழுவினால் அரச உத்தியோகத்தர்களுக்கு விழிப்புணர்வூட்டுவதற்காகப் பிரதேச செயலாளர் பிரிவு மட்டத்தில் விழிப்புணர்வூட்டல் நிகழ்ச்சித் திட்டங்கள் நடாத்தப்பட்டன. எனினும், நாட்டில் நிலவிய கொவிட் தொற்று நிலைமை மற்றும் எரிபொருள் நெருக்கடி காரணமாக பிரதேச செயலகங்களுக்குச் சென்று நிகழ்ச்சித் திட்டங்களை நடைமுறைப்படுத்தும் சூழ்நிலை காணப்படவில்லை. எனவே, மாவட்ட மட்டத்தில் தெரிவு செய்யப்பட்ட பிரதேச செயலகங்களுக்கு நிகழ்நிலை முறையில் விழிப்புணர்வூட்டல் நிகழ்ச்சித் திட்டங்கள் நடாத்தப்பட்டன.

**II. நிகழ்நிலை முறை ஊடாக ஆய்வுகளை நடாத்துதல்.**

கடந்த காலப்பகுதியில் அரசகரும மொழிகள் ஆணைக்குழுவினால் பௌதிக ரீதியாக மேற்கொள்ளப்பட்ட மொழிக் கணிப்பாய்வுகளை உத்தேசிக்கப்பட்ட அளவில் மேற்கொள்ள முடியாமற் போனது. இதன் காரணமாக கூகுள் படிவமொன்றை (Google Form) வடிவமைத்து நிகழ்நிலை முறையில் அதிக எண்ணிக்கையிலான நிறுவனங்களிடமிருந்து தகவல்களைப் பெற்றுக் கொள்வதற்குரிய நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டன.

**2022 ஆம் ஆண்டிற்கான செயற்பாடுகளை ஆரம்பிக்கையில் நிலவிய சவால்கள்**

**I. மனித வளப் பற்றாக்குறை**



அரசகரும மொழிகள் ஆணைக்குழுவின் அங்கீகரிக்கப்பட்ட பதவியணி 42 ஆகும். எனினும், இந்த ஆண்டு 24 உத்தியோகத்தர்கள் மாத்திரமே பதவியணியில் காணப்பட்டதோடு, 18 பதவிகள் வெற்றிடங்களாகக் காணப்பட்டன. அரசகரும மொழிகள் ஆணைக்குழுவின் நோக்கங்களை நிறைவேற்றுவதற்கு நேரடியாகத் தொடர்புபடும் மொழி அதிகாரிகளின் 03 பதவிகளில் 02 பதவிகள் வெற்றிடங்களாகக் காணப்பட்டதுடன், மொழி மேம்பாட்டு மற்றும் விசாரணை அதிகாரிகளின் 10 பதவிகளில் 06 பதவிகள் வெற்றிடங்களாகக் காணப்பட்டன. மேலும், 03 மொழிபெயர்ப்பாளர் பதவிகளும் வெற்றிடங்களாகக் காணப்பட்டன.

**II. எரிபொருள் பற்றாக்குறை**

அரசகரும மொழிகள் ஆணைக்குழுவினால் நடைமுறைப்படுத்தப்படும் மொழிக் கணிப்பாய்வுகள், விழிப்புணர்வூட்டல் நிகழ்ச்சித் திட்டங்கள், பாடசாலை நிகழ்ச்சித் திட்டங்கள் போன்றன களச் செயற்பாடுகளாகும். இந் நிகழ்ச்சித் திட்டங்களை நடைமுறைப்படுத்துகையில் போக்குவரத்து வசதிகளை வழங்குவது அத்தியாவசியமானதொரு விடயமாகும். இந்த வருடம் நிலவிய எரிபொருள் பற்றாக்குறை காரணமாக எதிர்பார்த்தவாறு கள நிகழ்ச்சித் திட்டங்களை நடைமுறைப்படுத்த முடியாமற் போனது.



**பகுதி III**

# அரசகரும மொழிகள் ஆணைக்குழு

# நிதிக் கூற்றுக்கள்

# 2022



**2022 டிசம்பர் மாதம் 31 ஆம் திகதியன்று நிதி நிலைமைக் கூற்று**

| சொத்துக்கள் | குறிப்பு | 2022 | 2021 |
|---|---|---|---|
| பொருட் பதிவேடு | 1 | 292,855.00 | 292,900.00 |
| முற்கொடுப்பனவுகள் | 2 | 72,527.44 | 22,698.00 |
| ஊழியர்களுக்கு வழங்கப்படும் கடன் | 3 | 3,902,170.04 | 4,018,826.94 |
| இருப்புப் பொருள் | | - | 103,500.00 |
| எழுதுகருவிகள் (இருப்பு) | | 1,294,648.70 | 474,019.74 |
| உப கட்டுநிதி தீர்ப்பனவு | | 3.00 | - |
| நிதி மற்றும் நிதிக்கு சமனான | | 1,275,267.12 | 5,877,971.80 |
| விசேட முற்பணம் | | - | 2,000.00 |
| அறவிடப்பட வேண்டிய அனர்த்தக் கடன் வட்டி | 15 | 2,203.60 | - |
| விழா முற்பணம் | | 8,754.00 | 7,400.00 |
| ஏனைய சொத்துக்கள் | | - | 14,950.00 |
| | | **6,848,428.90** | **10,814,266.48** |
| **நடைமுறையல்லாச் சொத்துக்கள்** | | | |
| ஆதனம், பொறித்தொகுதி மற்றும் உபகரணங்கள் | 4 | 12,923,363.47 | 7,987,641.77 |
| அருவ சொத்துக்கள் | 4.1 | 553,320.00 | - |
| | | **13,476,683.47** | **7,987,641.77** |
| மொத்தச் சொத்துக்கள் | | **20,325,112.37** | **18,801,908.25** |
| **பொறுப்புக்கள்** | | | |
| **நடைமுறைப் பொறுப்புக்கள்** | | | |
| செலுத்த வேண்டிய | 5 | 4,233,849.73 | 4,145,642.32 |
| கணக்காய்வுக் கட்டணத்திற்கான ஏற்பாடுகள் | | 172,414.00 | 136,014.00 |
| | | **4,406,263.73** | **4,281,656.32** |
| **நடைமுறையல்லாப் பொறுப்புக்கள்** | | | |
| பணிக்கொடைக்கான ஏற்பாடுகள் | 6 | **4,395,671.17** | **3,952,612.77** |
| **மொத்தப் பொறுப்புக்கள்** | | **8,801,934.90** | **8,234,269.09** |
| **தேறிய பொறுப்புக்கள்** | | **11,523,177.48** | **10,567,639.16** |
| **தேறிய சொத்துக்கள்/சம பங்குகள்** | | | |
| **திரட்டிய மிகை/நிலுவை** | 7 | **11,523,177.48** | **10,567,639.16** |

**இதனுடன் இணைக்கப்பட்டுள்ள குறிப்பானது இந்நிதிக் கூற்றுக்களின் தொடர்ச்சியான பகுதியாகும். அடைப்புக்குறிக்குள் காணப்படும் இலக்கங்கள் கழித்தலைக் குறிக்கின்றன.**

**நிதிக் கூற்றுக்கள், இலங்கை அரச கணக்கீட்டு நியமங்கள் மற்றும் அரசாங்கத்தின் நிதி ஒழுங்குவிதிகள், சுற்றறிக்கைகளுக்கு அமைவாகத் தயாரிக்கப்பட்டுள்ளன.**

**இந்நிதிக் கூற்றுக்களைத் தயாரிப்பது தொடர்பில் ஆணைக்குழு பொறுப்புக் கூறும். ஆணைக்குழுவிற்காக மற்றும் அதன் சார்பாக ஒப்பமிடப்பட்டது.**

……………………… ………………………….. …………………………

**(தலைவர்)** **(ஆணைக்குழு அங்கத்தவர்)** **ஆர்.யூ.ஹெட்டிதந்திரிகே**

**(கணக்காளர் - பதிற்கடமை)**

**2022 டிசம்பர் 31 ஆம் திகதியுடன் முடிவடைந்த வருடத்திற்கான நிதி செயலாற்றுகைக் கூற்று**

| | குறிப்பு | 2022 | 2021 |
|---|---|---|---|
| **வருமானங்கள்** | | | |
| திறைசேரியிடமிருந்து கிடைக்கப்பெற்ற மீண்டுவரும் ஏற்பாடுகள் | | 28,309,000.00 | 28,122,000.00 |
| வருமானங்கள் | | 33,302.85 | 1,100.00 |
| ஏனைய வருமானங்கள் | 8 | 164,861.25 | 167,615.61 |
| **மொத்த வருமானங்கள்** | | **28,507,164.10** | **28,290,715.61** |
| **செலவினங்கள்** | | | |
| சம்பளம், வேதனம் மற்றும் ஊழியர் நலன்கள் | 9 | 16,800,105.14 | 16,000,549.20 |
| விநியோகம் மற்றும் நுகர்வுப் பயன்கள் | 10 | 1,912,834.88 | 1,949,732.52 |
| பெறுமானத் தேய்வுகள் | | 3,555,232.63 | 1,470,158.63 |
| புதுப்பித்தல் மற்றும் பராமரிப்பு | 11 | 3,262,062.97 | 1,113,061.47 |
| பயன்பாடுகள் மற்றும் பிற சேவைகள் | 12 | 9,721,632.71 | 5,231,318.44 |
| ஏனைய செலவினங்கள் | 13 | 546,315.94 | 593,940.39 |
| அரசகரும மொழிக் கொள்கையை நடைமுறைப்படுத்தும் நிகழ்ச்சித் திட்டங்கள் | 14 | 2,007,341.51 | 1,129,431.10 |
| கணக்காய்வுக் கட்டணங்கள் | | 250,000.00 | 250,000.00 |
| **மொத்தச் செலவினம்** | | **38055525.78** | **27,738,191.75** |
| **காலப்பகுதிக்கான மிகை/(நிலுவை)** | | **(9,548,361.68)** | **552,523.86** |

**நிதிக் கூற்றுக்களுடன் இணைக்கப்பட்டுள்ள குறிப்புக்களானது இந்நிதிக் கூற்றுக்களின் தொடர்ச்சியான பகுதியாகும். அடைப்புக்குறிக்குள் காணப்படும் இலக்கங்கள் கழித்தலைக் குறிக்கின்றன.**

**அரசகரும மொழிகள் ஆணைக்குழு**

**2022 டிசம்பர் 31 ஆம் திகதியுடன் முடிவடைந்த வருடத்திற்கான தேறிய சொத்துக்கள்/உரிமைகளின் மாற்றங்கள் குறித்த கூற்று**

| | **திறைசேரியிடமிருந்து கிடைக்கப்பெற்ற ஏற்பாடுகள்** | **திரட்டிய நிதியம்** | **வருடத்திற்கான மிகை/(நிலுவை)** | **வேறு** | **மீள் கணக்கிடல்** | **மொத்தம்** |
|---|---|---|---|---|---|---|
| 2022.01.01 ஆம் திகதியன்று ஆரம்ப மீதி | | 7,704,496.05 | | | | 7,704,496.05 |
| திறைசேரியிடமிருந்து கிடைக்கப் பெற்ற மூலதன ஏற்பாடுகள் | 1,745,000.00 | | | | | 1,745,000.00 |
| மீள் கணக்கிடல் | | | | | 744,650.00 | 744,650.00 |
| 2021 ஆம் ஆண்டிற்கான மிகை/(நிலுவை) | | | 552,523.86 | | | 552,523.86 |
| தீர்க்கப்படாத உப கட்டுநிதியை சீராக்கல் | | | | (179,030.75) | | (179,030.75) |
| 2021 டிசம்பர் 31 ஆம் திகதியன்று மீதி | 1,745,000.00 | 7,704,496.05 | 552,523.86 | (179,030.75) | 744,650.00 | 10,567,639.16 |
| 2022 சனவரி 01 ஆம் திகதியன்று மீதி | | 10,567,639.16 | | | | 10,567,639.16 |
| விழா முற்பணக் கடனின் ஆரம்ப மீதிக்கு சீராக்கல் | | 2600.00 | | | | 2600.00 |
| அருவ சொத்தின் (இணையத்தளம்) ஆரம்ப மீதிக்கு சீராக்கல் | | 614,800.00 | | | | 614,800.00 |
| திறைசேரியிடமிருந்து கிடைக்கப் பெற்ற மூலதன ஏற்பாடுகள் | 2,300,000.00 | | | | | 2,300,000.00 |
| மீள் கணக்கிடல் | | | | | 7,856,500.00 | 7,856,500.00 |
| 2022 ஆம் ஆண்டிற்கான மிகை/(குறை) | | | (9,548,361.68) | | | (9,548,361.68) |
| 2022 டிசம்பர் 31 ஆம் திகதியன்று மீதி | 2,300,000.00 | 11,185,039.16 | (9,548,361.68) | | 7,856,500.00 | 11,523,177.48 |

**நிதிக் கூற்றுக்களுடன் இணைக்கப்பட்டுள்ள குறிப்புக்களானது இந்நிதிக் கூற்றுக்களின் தொடர்ச்சியான பகுதியாகும். அடைப்புக்குறிக்குள் காணப்படும் இலக்கங்கள் கழித்தலைக் குறிக்கின்றன.**

அரசகரும மொழிகள் ஆணைக்குழு

2022 டிசம்பர் 31 ஆம் திகதியுடன் முடிவடைந்த வருடத்திற்கான நிதிப்பாய்ச்சற் கூற்று

| | 2022<br>ரூ. | 2021<br>ரூ. |
|---|---|---|
| **செயற்பாட்டு நடவடிக்கைகள் மூலமான நிதிப் பாய்ச்சல்** | | |
| **மிகை/(நிலுவை)** | 9,548,361.68) | 552,523.86 |
| **நடைமுறை அல்லா அசைவுகள்** | | |
| **வாகனங்களை அப்புறப்படுத்துவதன் மூலம் கிடைக்கப்பெற்ற இலாபம்** | - | - |
| **பணிக்கொடை** | 443,058.40 | 390,252.50 |
| **தேய்மானம்** | 3,555,232.63 | 1,470,158.63 |
| **முந்தைய ஆண்டின் சீராக்கல்** | | |
| **விழாக் கடன் மீதி சீராக்கல்** | 2,600.00 | - |
| **நடைமுறை அல்லா அசைவுகளின் பின்னர் நிதிப் பிரவாகம்** | (5,547,470.65) | 2,412,934.99 |
| **செயற்பாட்டு மூலதன மாற்றங்கள்** | | |
| முற்கொடுப்பனவுகளின் (அதிகரிப்பு)/வீழ்ச்சி | (49,829.44) | (22,698.00) |
| பொருட் பதிவேடுகளின் (அதிகரிப்பு)/வீழ்ச்சி | 45.00 | - |
| ஊழியர்களுக்கு வழங்கப்பட்ட கடன்களின் (அதிகரிப்பு)/வீழ்ச்சி | 116,656.90 | (668,356.46) |
| இருப்புப் பொருட்களின் (அதிகரிப்பு)/வீழ்ச்சி | 103,500.00 | (103,500.00) |
| எழுதுகருவிகளின் (இருப்பு) (அதிகரிப்பு)/வீழ்ச்சி | (820,628.96) | 344,071.16 |
| ஏனைய சொத்துக்களின் (அதிகரிப்பு)/வீழ்ச்சி | 14,950.00 | (14,950.00) |
| உப கட்டுநிதிகளின் (அதிகரிப்பு)/வீழ்ச்சி | (3.00) | - |
| விசேட முற்பணங்களின் (அதிகரிப்பு)/வீழ்ச்சி | 2,000.00 | - |
| தீர்வு செய்யப்படாத முற்பணங்களின் (அதிகரிப்பு)/வீழ்ச்சி | - | - |
| அறவிடப்பட வேண்டிய இடர்க் கடன் வட்டிகளின் (அதிகரிப்பு)/வீழ்ச்சி | (2,203.60) | - |
| விழா முற்பணங்களின் (அதிகரிப்பு)/வீழ்ச்சி | (1,354.00) | - |
| செலுத்த வேண்டிய - (அதிகரிப்பு)/வீழ்ச்சி | 88,207.41 | 3,840,080.48 |

| | | |
|---|---|---|
| உப கட்டுநிதி தீர்ப்பனவுகளின் (அதிகரிப்பு)/வீழ்ச்சி | - | 14,500.00 |
| செலுத்த வேண்டிய கணக்காய்வுக் கட்டணங்களின் (அதிகரிப்பு)/வீழ்ச்சி | 36,400.00 | (177,200.00) |
| | (512,259.69) | 3,211,947.18 |
| **செயற்பாட்டு நடவடிக்கைகளிலிருந்து தேறிய நிதிப் பாய்ச்சல்** | **(6,059,730.34)** | **5,624,882.17** |
| **முதலீட்டு நடவடிக்கைகளிலிருந்து நிதிப் பாய்ச்சல்** | | |
| ஆதனம், பொறித்தொகுதி மற்றும் உபகரணங்கள் கொள்வனவு | (842,974.34) | (3,297,348.39) |
| மோட்டார் வாகனங்களை அப்புறப்படுத்தல் | - | - |
| முதலீட்டு நடவடிக்கைகளிலிருந்து தேறிய நிதிப் பாய்ச்சல் | **(842,974.34)** | **(3,297,348.39)** |
| நிதி நடவடிக்கைகளிலிருந்து நிதிப் பாய்ச்சல் | | |
| திறைசேரியிலிருந்து கிடைக்கப்பெற்ற மூலதனக் கொடைகள் | 2,300,000.00 | 1,745,000.00 |
| நிதி நடவடிக்கைகளிலிருந்து தேறிய நிதிப் பாய்ச்சல் | **2,300,000.00** | **1,745,000.00** |
| **நிதி மற்றும் சமனான பெறுமதிகளின் தேறிய அதிகரிப்பு/(வீழ்ச்சி )** | **(4,602,704.68)** | **4,072,533.78** |
| வருடத்தின் ஆரம்பத்தில் நிதி மற்றும் சமனான பெறுமதிகள் | **5,877,971.80** | **1,805,438.02** |
| வருடத்தின் இறுதியில் நிதி மற்றும் சமனான பெறுமதிகள் | **1,275,267.12** | **5,877,971.80** |

**அரசகரும மொழிகள் ஆணைக்குழு**

**2022 டிசம்பர் 31 ஆம் திகதியன்று நிதிக் கூற்றுக்களுக்கான கணக்கீட்டுக் கொள்கைகள்**

---

**1. அறிக்கையிடும் நிறுவனம்**

அரசகரும மொழிகள் ஆணைக்குழுவானது 1991 ஆம் ஆண்டின் 18 ஆம் இலக்க அரசகரும மொழிகள் ஆணைக்குழுச் சட்டத்தின் ஏற்பாடுகளுக்கு அமைவாகத் தாபிக்கப்பட்ட முழுமையாக அரசாங்கத்துக்குச் சொந்தமான நியதிச்சட்ட நிறுவனமாகும் என்பதுடன், அது அரச சேவை, மாகாண சபைகள் மற்றும் உள்ளூராட்சி அமைச்சின் விடயப்பரப்பில் உள்ளடங்கும். ஆணைக்குழுவின் பதிவு செய்யப்பட்ட அலுவலகம் "ஜனஜயசிட்டி" கட்டிடம், 09 ஆம் மாடி, நாவல வீதி, இராஜகிரியவில் அமைந்துள்ளது.

1.1 **கொள்கைசார் செயற்பாடுகள் மற்றும் செயற்பாட்டு நடவடிக்கைகளின் தன்மை**

அரசகரும மொழிக் கொள்கையை நடைமுறைப்படுத்தலை மேற்பார்வை செய்தலே ஆணைக்குழுவின் கொள்கைசார் செயற்பாடாகும்.

**1.2 ஊழியர் எண்ணிக்கை**

2022 டிசம்பர் 31 ஆம் திகதியன்று ஆணைக்குழுவின் ஊழியர் எண்ணிக்கை 21 ஆக இருந்ததோடு, 2022 ஆம் ஆண்டிற்கான அங்கீகரிக்கப்பட்ட ஊழியர் எண்ணிக்கை 42 ஆகும்.

1.3 **நிதிக் கூற்றுக்களின் பொறுப்பு**

இந்நிதிக் கூற்றுக்களைத் தயாரித்தல் மற்றும் சமர்ப்பித்தல் தொடர்பில் பணிப்பாளர் குழு பொறுப்புக் கூறும்.

2 **நிதிக் கூற்றுக்களைத் தயாரிப்பதன் அடிப்படை**

**2.1 இணக்கக் கூற்று**

இந்நிதிக் கூற்றுக்களானது நிதி செயலாற்றுகையின் கூற்று, நிதிப் பிரவாகக் கூற்று, சம பங்கு (Equity) மாற்றத்தின் கூற்று மற்றும் நிதிக் கூற்றுக்களுக்கான குறிப்புக்கள் போன்ற விடயங்களைக் கொண்டமைந்துள்ளன. இலங்கை பட்டயக் கணக்காளர்களின் நிறுவனம், நிதி, திட்டமிடல் அமைச்சு மற்றும் கணக்காய்வாளர் தலைமை அதிபதி திணைக்களம் என்பன இணைந்து பணிக்கப்பட்டுள்ளவாறும் நிதி ஒழுங்குவிதிகள் மற்றும் ஏற்புடைய அரச சுற்றறிக்கைகளில் குறிப்பிடப்பட்டுள்ள தேவைப்பாடுகளுக்கு அமைவாக இலங்கை அரச துறை கணக்கீட்டு நியமங்களுக்கு அமைவாகவும் நிதிக் கூற்றுக்கள் தயாரிக்கப்பட்டுள்ளன.

2.2 **மதிப்பீட்டு அடிப்படை**

1983 ஆம் ஆண்டின் 12 ஆம் இலக்க பணிக்கொடைச் சட்டத்தை அடிப்படையாகக் கொண்ட ஊழியர் ஓய்வூதியப் பணிக்கொடை தவிர்ந்த வரலாற்று ஆகுசெலவு அடிப்படையில் நிதிக் கூற்றுக்கள் தயாரிக்கப்பட்டுள்ளன. நிதிக் கூற்றுக்களின் பணவீக்கக் காரணிகளுக்காக சீராக்கல்கள் மேற்கொள்ளப்படவில்லை.

**2.3 சமர்ப்பிக்கப்படும் நாணய வகை**

இலங்கை ரூபாய்களில் நிதிக் கூற்று சமர்ப்பிக்கப்படும்.

மதிப்பீடுகளில் குறிப்பிடத்தக்க அளவிலான தகவல்கள் மற்றும் நிதிக் கூற்றுக்களின் இனங்காணப்படும் பெறுமானங்களின் அடிப்படையில் நிச்சயமற்ற வகையில் பெரிதும் கவனிக்கத்தக்க தாக்கங்களாவன பின்வரும் விடயங்களாகும்.

ஊழியர் பணிக்கொடைக்கான ஏற்பாடுகள் (குறிப்பு 6)

சொத்துக்கள் சேதம் (குறிப்பு 4 மற்றும் 4.1)

2.4 **பொருள் சார்ந்த தன்மை மற்றும் திரட்டல்**

ஒவ்வொரு வகைக்குமுரிய சமமான உருப்படிகள் வெவ்வேறாக சமர்ப்பிக்கப்பட்டுள்ளன. சமமற்ற வகைகளின் அல்லது பணிகளின் உருப்படிகள் அருவங்களே தவிர வெவ்வேறாகக் காட்டப்படவில்லை.

2.5 **ஒப்பீட்டு ரீதியிலான தகவல்கள்**

நடைமுறை வருடத்தில் சமர்ப்பிப்பதன் பொருட்டு எல்லாச் சந்தர்ப்பங்களிலும் உடன்பாட்டைக் காட்டும் வகையில் ஒப்பீட்டுத் தகவல்கள் வகைப்படுத்தப்பட்டுள்ளன.

**3 தனித்துவமான கணக்கீட்டு நடைமுறைகள்**

கடந்த வருடத்தில் பயன்படுத்தப்பட்ட கணக்கீட்டு நடைமுறைகள் மாற்றமடையாது என்பதுடன், அவை நிரந்தரமாக நிறுவனத்தினால் ஏற்புடையனவாகக் கொள்ளப்பட்டுள்ளன.

**3.1 சொத்துக்கள் மற்றும் அவற்றின் மதிப்பீட்டு அடிப்படை**

**ஆதனம், பொறித்தொகுதி மற்றும் உபகரணங்கள்**

**இனங்காணல் மற்றும் அளவிடல்**

ஆதனங்கள், பொறித்தொகுதிகள் மற்றும் உபகரணங்கள் என்பன அவை கொள்வனவு செய்யப்பட்ட விலை அல்லது அதன் மீதான வேறு ஏதேனும் இடைநேர்விளைவான செலவினங்களின் அடிப்படையில் குறிப்பிடப்பட்டுள்ளன. இச்சொத்துக்கள், பின்வரும் அடிப்படையில் வழங்கப்படும் குறைந்த திரட்டிய தேய்மான செலவினத்தில் காட்டப்படும்.

ஆதனங்கள், பொறித்தொகுதிகள் மற்றும் உபகரணங்களின் ஆகுசெலவு, சொத்துக்களைப் பெற்றுக் கொள்வதற்காக நேரடியாக அறவிடக் கூடிய செலவினத்துடன் உள்ளடக்கப்பட்டுள்ளது. பொது திறைசேரியினால் அல்லது வேறு ஒரு அரச நிறுவனத்தினால் சொத்துக்கள் மாற்றம் செய்யப்படும் சந்தர்ப்பத்தில் அச் சொத்துக்களைப் பெற்றுக் கொள்வதற்காகக் குறித்த நிறுவனத்திற்கு ஏற்பட்ட செலவினம் அல்லது மீண்டும் கணக்கிடப்படும் தொகையின் மீது அச் சொத்துக்களைப் பயன்படுத்துவதாயின், அப்போது குறித்த சொத்துக்கள் ஆகுசெலவாகக் குறிப்பிடப்படும்.

முழுமையாகத் தேய்மானமடைந்தும் பயன்படுத்த முடியாத நிலையிலும் காணப்படும் சொத்துக்கள் எனினும் அவை ஆணைக்குழுவினால் பயன்படுத்தப்படுமாயின், அவற்றின் பயன்பாட்டுக் காலத்தை மதிப்பிட முடியாது என்பதனால் அவை மீளவும் கணக்கிடப்படும் அல்லது அழிக்கப்படும் (impair). எவ்வாறாயினும் இவ்வாறாக சொத்துக்கள் தொடர்பான தகவல்கள் நிதிக் கூற்றுக்களுக்கான குறிப்பில் வெளிப்படுத்தப்படும்.

## 3.2 மதிப்பீடுகளின் பயன்பாடு மற்றும் தீர்மானங்கள்

நிதிக் கூற்றுக்களைத் தயாரிக்கையில் மதிப்பீடுகளைத் தயாரித்தல், தீர்மானங்களை மேற்கொள்ளல் மற்றும் அனுமானித்தல், கணக்கீட்டு நடைமுறைகளை ஏற்புடையதாக்கிக் கொள்கையில் ஏற்படும் தாக்கங்கள், அறிக்கையிடப்பட்ட சொத்துக்கள், பொறுப்புக்கள், வருமானங்கள் மற்றும் செலவினங்கள் முதலானவை குறித்து முகாமைத்துவம் கவனம் செலுத்துதல் வேண்டும். நிலைமைகளின் கீழ் உடன்பட முடியுமென நம்புகின்ற வரலாற்று அனுபவங்கள் மற்றும் பல்வேறு வகையான வேறு காரணிகளின் அடிப்படையில் மதிப்பீடுகள் மற்றும் அனுமானங்கள் என்பன அமைகின்றன. உண்மையான முடிவுகள் மதிப்பிடப்பட்ட தொகையால் வேறுபட முடியும்.

### பெறுமானத் தேய்வு

முழு வருடத்திற்குமான பெறுமானத் தேய்வானது குறித்த உருப்படி கொள்வனவு செய்யப்பட்ட வருடத்திலேயே வழங்கப்படும் என்பதோடு, 2008 ஆம் வருடத்திற்கு முன்னர் கொள்வனவு செய்யப்பட்ட உருப்படிக்கு வருடத்தினுள் மேற்கொள்ளப்பட்ட அகற்றல்களுக்குப் பெறுமானத் தேய்வு வழங்கப்படவில்லை. 2008 ஆம் வருடத்தின் பின்னர் கொள்வனவு செய்யப்பட்ட சொத்துக்களுக்கு உருப்படி கொள்வனவு செய்யப்பட்ட திகதி/உருப்படி அகற்றப்பட்ட மாதம் என்பவற்றின் அடிப்படையிலேயே பெறுமானத் தேய்வு கணக்கிடப்படும்.

இவ் வருடத்திற்கு மற்றும் ஒப்பீட்டு வருடத்திற்கான பயன்தரு ஆயுட்காலம் பின்வருமாறு.

| | |
|---|---|
| பொறிகள் மற்றும் இயந்திரங்கள் | 5 வருடங்கள் |
| அலுவலக உபகரணங்கள் | 10 வருடங்கள் |
| அலுவலகத் தளபாடங்கள் | 10 வருடங்கள் |
| மோட்டார் வாகனங்கள் | 4 வருடங்கள் |
| கணனி | 4 வருடங்கள் |
| குளிரூட்டிகள் | 5 வருடங்கள் |
| கட்டிடங்கள் மற்றும் கட்டமைப்புகள் | 10 வருடங்கள் |
| கட்டிடங்கள் - சுத்திகரிப்பு அறை | 20 வருடங்கள் |
| அருவச் சொத்துக்கள் - இணையத்தளம் | 10 வருடங்கள் |

## 3.3 பொருட் பட்டியல்

பொருட் பட்டியலானது குறைந்த கிரயம் மற்றும் நிகர தேறத்தக்க பெறுமதிகளினால் கணிப்பிடப்பட்டுள்ளது. நிகர தேறத்தக்க பெறுமதி என்பது, சொத்துக்களை விற்றுப் பெறக்கூடிய பணத்திலிருந்து விற்பனைச் செலவினத்தைக் கழித்ததன் பின்னர் கிடைக்கப்பெறும் பெறுமானமாகும். பொருட் பட்டியலானது ஆணைக்குழுவின் கூற்றுக்களைக் கொண்டமைந்தது. இக் கூற்றுக்களின் தேறத்தக்க பெறுமதி என்பது, விலை நிலையானதாக இருக்கும் போது விற்பனை விலையாகும். இது தொடர்பில் ஏற்பதற்கு விற்பனைக் கிரயம் அங்கீகரிக்கப்பட மாட்டாது.

## 3.4 முற் கொடுப்பனவுகள் மற்றும் மேற்கொள்ள வேண்டிய கொடுப்பனவுகள்

முற் கொடுப்பனவுகள் மற்றும் மேற்கொள்ள வேண்டிய கொடுப்பனவுகள் என்பன ஏற்கப்படும் உண்மைக் கிரயத்தின் மற்றும் ஒப்பந்தத்தின் கீழ் ஏற்க நேரிடும் கிரயத்தில் காட்டப்பட்டுள்ளன.

## 3.5 ஊழியர்களுக்கு வழங்கப்படும் கடன்

ஊழியர்களுக்கு வழங்கப்படும் கடன் தொடர்பில் கிரயத்தில் குறிப்பிடப்படும். அனுமதி வழங்கப்படாத காரணத்தினால் தகுதியற்ற அல்லது மீளப் பெற முடியாத கடன் பொருட்டு ஏற்பாடுகள் செய்யப்படவில்லை. தகுதியற்ற அல்லது மீளப் பெற முடியாத கடன் தொடர்பான விபரங்களின் வெளிப்படுத்தலாக நிதிக் கூற்றில் குறிப்பிடப்பட்டுள்ளது.

## 3.6 பணிக்கொடைக்கான ஏற்பாடுகள்

1983 ஆம் ஆண்டின் 12 ஆம் இலக்க பணிக்கொடை சட்டத்திற்கு அமைய பணிக்கொடைக்கான ஏற்பாடுகள் கணக்கிடப்படும். தற்போதிருக்கும் நிரந்தர ஊழியர்களுக்கு வருடத்திற்குரிய பணிக்கொடையாகத் தமக்கு உரித்தான இறுதி மாதத்தின் அடிப்படைச் சம்பளத்தின் அரைவாசியாகும் வகையில் கணக்கிடப்பட்டு வழங்கப்படும்.

## 3.7 வருமானம்

மீண்டுவரும் செலவினங்களின் பொருட்டு பொது திறைசேரியினால் விடுவிக்கப்படும் முற்பணக் கட்டுநிதியானது வருமானமாக இனங்காணப்பட்டது. மூலதன செலவினங்களுக்கு முற்பணக் கட்டுநிதி அல்லது மூலதன செலவினங்களின் நேரடி மாற்றல்கள் ஆணைக்குழுவின் மொத்த நேரடி மூலதனமாக இனங்காணப்பட்டது.

## 3.8 செலவினம்

ஏற்க நேரிடும் கிரயத்தின் நேரடி தொடர்பு மற்றும் வருமானத்தின் விசேடமான உருப்படியின் வருமானங்களை அடிப்படையாகக் கொண்டு நிதிச் செயலாற்றுகைக் கூற்றின் செலவினங்கள் இனங்காணப்படும். ஆணைக்குழுவின் செயற்பாடுகளின் பொருட்டு ஏற்கப்படும் அனைத்து செலவினங்கள் அதாவது, ஆதனம், பொறி மற்றும் உபகரணங்கள் மற்றும் உபகரணங்களைப் பராமரிக்கையில் ஏற்க நேரிடும் செலவினங்கள் மற்றும் அரசகரும மொழிக் கொள்கையை நடைமுறைப்படுத்துவதற்கான செலவினங்கள் முதலான அனைத்து செலவினங்களும் நிதிச் செயலாற்றுகைக் கூற்றில் உள்ளடக்கப்பட்டுள்ளன.

## 3.9 நிதிப் பாய்ச்சற் கூற்று

மறைமுகமான முறையைப் பயன்படுத்தி நிதிப் பாய்ச்சற் கூற்றுத் தயாரிக்கப்பட்டுள்ளது.

**அரசகரும மொழிகள் ஆணைக்குழு**

**2022 டிசம்பர் 31 ஆம் திகதியுடன் முடிவடைந்த நிதிக் கூற்றுக்களுக்கான குறிப்புக்கள்**

**1. பொருட் பதிவேடு**

**கூற்றுக்கள்**

| கூற்றின் பெயர் | 2022<br>ரூ. | 2021<br>ரூ. |
|---|---|---|
| ஆங்கில சிங்கள கலைச்சொல்லகராதிகள் | 53,050.00 | 53,050.00 |
| தமிழ் ஆங்கில கலைச்சொல்லகராதிகள் | 24,390.00 | 24,390.00 |
| தமிழ் விசேட கலைச்சொல்லகராதிகள் | 135.00 | 180.00 |
| 40 மணித்தியால குறுகிய கால பாடநெறி புத்தகம் | 215,280.00 | 215,280.00 |
| **மொத்தம்** | **292,855.00** | **292,900.00** |

**2. முற்கொடுப்பனவுகள்**

| | 2020 | 2019 |
|---|---|---|
| **288 – தபாற் கட்டணம்** | 12,075.00 | - |
| **2862 - அலுவலக உபகரணங்கள் பராமரிப்பு** | 32,277.44 | 22,698.00 |
| **2864 - கணனி பராமரிப்பு** | 28,175.00 | - |
| | 72,527.44 | - |

